*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்: கொவிட்19 தொற்றினை மையப்படுத்திய ஆய்வு

**ஏ.டபிள்யு. பாத்திமா பெனாசிர்**
கமு/சது/ அல் முனீர் வித்தியாலயம், சம்மாந்துறை.

Correspondence: awfnusla@gmail.com

**கட்டுரைச் சுருக்கம்**

*தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான உள்நாட்டு மோதலானது 2009இல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் சமாதானம் மற்றும் அபிவிருத்தி என்பன ஏற்படும் என முஸ்லிம் சமூகத்தினராலும் பிற சமூகங்களாலும் எதிர்பார்க்கப்பட்டாலும் கூட நாட்டில் தோன்றிய புதிய சிங்கள பௌத்த தீவிரவாத குழுக்களால் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினர் குறிவைத்து தாக்கப்பட்டமையானது யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளது எனலாம். அதாவது முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் வெறுப்பு பேச்சுக்கள் போன்றன சிங்கள பௌத்த தீவிரவா திகளால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வியை அடுத்து முஸ்லிம் சமூகத்தில் குறிவைத்துள்ளனர் எனும் வகையில் சிந்திக்க வழிவிட்டது. மேலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிரான வெறுக்கத்தக்க பேச்சுக்கள் மற்றும் வன்முறைகள் என்பன அரசின் ஆதரவுடன் இடம்பெறுகின்றது என்பதும் தெளிவா கின்றது. அவ்வாறு உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குப் பின் முஸ்லிம்களின் மீதான அதிகரித்த தடுப்புக்காவல் மற்றும் கண்காணிப்பு என்பவற்றுடன் சர்வதேச ரீதியில் பரவி வருகின்ற* COVID19 *தொற்றின் விளைவால் முஸ்லிம் சமூகத்தின் முக்கிய நகரங்கள் மூடப்படுதல் மற்றும் முஸ்லிம்களின் இறந்த உடல்கள் கட்டாய தகனத்திற்கு உட்படுத்தப்படல் (இஸ்லாமிய மார்க்கத்திற்கு எதிரானது) போன்ற நிகழ்வுகள் அரசின் அனுசரணையுடன் இடம்பெற்றமை யாவும் முஸ்லீம்கள் மீதான அரசாங்கத்தின் எதிர் தன்மையை காட்டுகின்றது.* COVID19 *தொற்றானது முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை ஆராய்வதாக இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. இவ் ஆய்வானது இரண்டாம் நிலை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ் ஆய்வானது இலங்கையின் ஒரு புதிய மோதலை தவிர்க்க ஒரு முழுமையான அணுகுமுறை உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் வாதிக்கின்றது.*

**பிரதான சொற்கள்:** முஸ்லிம், போருக்குப் பிந்திய சூழல், வன்முறை, COVID19

## 1. அறிமுகம்

*1948* இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கையின் அடுத்தடுத்த நிர்வாகத்தில் பல்லின காரணங்களுக்காக முஸ்லிம் அரசியலுக்கு இடமளித்த வரலாறு உண்டு. இரண்டாவது சிறுபான்மையினராக முஸ்லிம்கள் இருப்பதால் இலங்கை உயர்குழாம் முஸ்லிம்கள் மற்றும் அரசியல்வாதிகள் போன்றோர் அவர்களுக்கும் அவர்களது சமூகத்திற்கும் உறுதியான பொருளா தாரத்தையும் கலாச்சார சலுகைகளையும் ஏற்படுத்த முயற்சித்தனர். அடுத்தடுத்த இலங்கை அரசாங்கங்கள் முஸ்லிம் உயர் குழுவினருக்கு சலுகைகளை வழங்கினர். இதற்கு பிரதான காரணம் பெரும்பான்மையினரை முஸ்லீம்களாக கொண்ட அரபு நாடுகள் தமிழ்ப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது இலங்கை அரசுக்கு ஆதரவு வழங்கியதுடன் குறைந்த திறன் கொண்ட இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் வழங்கியது.

அரபு பொருளாதாரம், இராணுவ ஆதரவை வென்றமை மற்றும் தமிழீழப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டமை போன்ற காரணங்களினால் சிங்கள உயர் குழாமினர் அவர்களது சொந்த நலன்களை முன்னேற்றினர் என்பது இரகசியமானது அல்ல (Saleem, 2016).

எவ்வாறாயினும் முஸ்லிம் சமூகம் 2009 இல் இருந்து பௌத்த தீவிரவாத சக்திகளால் குறிவைத்து தாக்கப்பட்டனர். இவ்வாறாக முஸ்லிம் சமூகத்திற்கும் பெரும்பான்மை சிங்கள சமூகத்திற்கும் அரசுக்கும் இடையிலான உறவு சீர்குலைந்தது. 2009ஆம் ஆண்டிலிருந்து சிங்கள அரசியல் தலைவர்கள் முஸ்லிம்களை பாதுகாக்க தவறி விட்டனர். முஸ்லிம்கள் தமிழர்களைப் போன்று பிராந்திய சுய ஆட்சியையோ வெளிப்படையான சுயநிர்ணய உரிமையையோ கோரி நிற்கவில்லை. அவ்வாறே சமீபத்திய ஈஸ்டர் தாக்குதல் அரசுக்கு எதிராக ஒட்டுமொத்த முஸ்லிம்களாலும் இடம்பெறவில்லை. எனினும் சிங்கள பெரும்பான்மை சமூகமானது ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றது.

எந்தவொரு அரசியல் மத சக்திகளும் சமூகத்தை இயக்குவதில்லை. எனினும் ஜனநாயகத்தை பின்பற்றும் அரசுகளில் அரசியல்வாதிகள் தங்களது அரசியல் ஆதாயங்களுக்காக மறைமுகமாக அரசியல் மத சக்திகளை பயன்படுத்துகின்றனர். இலங்கையில் பெரும்பான்மை சமூகத்தினர் இவற்றைப் பயன்படுத்தியே பொதுமக்களிடம் தங்களது பிரதிநிதித்துவத்தை உறுதி படுத்திக் கொள்கின்றனர். இவற்றின் விளைவே சிறுபான்மை முஸ்லிம் சமூகம் அரசியலில் இருந்து வழி தள்ளப்பட்டனர். ஆகவேதான் இக்கட்டுரையானது 2009இல் மோதல் முடிவுக்கு வந்ததை அடுத்து சிறுபான்மை முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் குறைகளை ஆராய்வதாக இடம்பெற்றுள்ளது.

## 2. ஆய்வு முறையியல்

COVID19 தொற்று நோயினால் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டு வரும் சவால்களை ஆராய்கின்ற இவ்வாய்வுக்கான தகவலும் தரவுகளும் இரண்டாம் நிலை மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. குறிப்பாக 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலால் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்ட சவால்கள் என்பன குறித்த ஆய்வுக்கான தகவல்கள் நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள குறிப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், அரசாங்க ஆவணங்கள் போன்வற்றிலிருந்து பெறப்பட்டுள் ளதோடு அவை ஆழமாகவும் விமர்சன ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதோடு அத் தகவல்கள் இவ் ஆய்வின் நோக்கங்களுக்கு ஏற்ப இக்கட்டுரையில் பல்வேறு பகுதிகளில் நேரடிக் கருத்துக்களாகவும் பகுப்பாய்வாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது.

## 3. 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்ட சவால்கள்

2014 ஜுன் 15 தெற்கில் இடம்பெற்ற அலுத்கம பிரச்சினையானது சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கு இடையிலான இன மோதலுக்கான மையப் புள்ளியாக அமைந்தது (Tegal, 2014). 1983 இல் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற படுகொலையுடன் ஒப்பிடும்போது இது ஒரு பாரிய வன்முறையாக காணப்பட்டது. இவ் வன்முறையை தூண்டிய காரணிகள் எவை எனவும் முதல் கல்லை எறிந்தவர் யார் என்ற வாதமும் இன்னும் காணப்படுகின்றன. ஆகவேதான் 2009 ஆம் ஆண்டைய போரின் முடிவில் இருந்து முஸ்லிம் சிங்களவர்களுக்கு இடையிலான பதட்டம் அதிகரித்துள்ளது என்பது இவ் வன்முறையின் பின்னணியில் தெளிவாகின்றது.

அளுத்கம வன்முறை முஸ்லிம்களுக்கு எதிரான பொதுபலசேனா என்ற தீவிர பௌத்த அமைப்பின் ஒருங்கிணைந்த வெறுப்பு பிரச்சாரத்தின் பின்னணியில் இடம் பெற்றதாகும். இவ அமைப்பின் தோற்றம் பற்றிய தெளிவு இல்லை என்றாலும் 10 - 12 தொடக்கம் 2014 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் வெறுப்பைத் தூண்டும் முறையான பிரச்சாரத்தின் அடிப்படையில் இவ் அமைப்பு தோன்றியது என்பது தெளிவாகின்றது (Saleem & Imtiyaz, 2015). சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கு இடையிலான உறவுகளில் பொதுபலசேனா அமைப்பு ஒரு புற்று நோயை கட்டவிழ்த்துவிட்டது.

Calhoun என்பவர் குறிப்பிடுவதன்படி, "நாம் வாழும் இப் சகாப்தத்தின் ஒரு பிரச்சினையாக பகிரப்பட்ட அடையாளங்கள் உள்ளது என்கிறார். அதாவது உண்மையில் பகிரப்பட்ட அடையாளங்கள் ஆனது ஒருவரை ஒருவர் ஒன்றினைக்கும் அதேவேளை எங்களிடையே உள்ள வேறுபாடுகளையும் அடையாளம் காணும் திறன் கொண்டது என்கின்றார்" (Calhoun, 2016). இலங்கையில் இவ்அடையாள பாதுகாப்பின்மை எல்லா பாகங்களிலும் உணரப்பட்டாலும் பெரும்பான்மை சமூகமான சிங்கள பௌத்தர்கள் தான் மிக அதிகமான விகாரங்களை வெளிப்படுத்துகின்றனர். குறிப்பாக இலங்கையில் தேரவாத பௌத்த சித்தாந்தத்தின் போக்கானது மோதலின் விளைவில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது (Deegalle, 2007).

மோதலுக்குப் பிறகு சிங்கள பௌத்த தேசியவாதம் எனும் கருத்தியல் சக்தி வாய்ந்ததாக உருவெடுத்துள்ளது (Zuhair, 2016). இது குறிப்பாக 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம்

ஆண்டுகளுக்கு இடையில் மதத் தலங்கள் மற்றும் மத சிறுபான்மை உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான வன்முறையில் ஈடுபட்டனர் (Gunatilleke, 2015). கணக்கிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடுவதன் படி வழிபாட்டு தலங்கள் தாக்கப்படுதல், கொள்ளை மற்றும் நாச வேலைகள், இணையங்களின் ஊடான வெறுப்பு பேச்சுக்கள் போன்றன கடுமையான வன்முறைகளாக சுட்டிக்காட்டப்படுகின்றது (Centre for Policy Alternatives, 2013).

சிறுபான்மையினர் வன்முறை என்பது ஆரம்பத்தில் கிறிஸ்தவ சமுதாயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் முஸ்லிம்கள் குறிவைத்து தாக்கப்பட்டனர். அந்த வகையில் 2012ஆம் ஆண்டு வடக்கின் தம்புள்ளை மசூதி மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன் வெறுப்பு பேச்சுகளும் ஆக்கிரமிப்புகளும் இடம்பெற்றமை (BBC News, 2012), மேலும் 2014 ஆம் ஆண்டில் பொதுபலசேனாவின் ஒருங்கிணைந்த வெறுப்பு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக தெற்கில் அலுத்கம கலவரம் நடைபெற்றமை, இதன்போது முஸ்லீம்களின் வணிக தாபனங்கள் குறிவைத்து தாக்கப்பட்டமை (BBC News Asia, 2013) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குறிப்பாக முஸ்லிம்களுக்கான செயலகம் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் முயற்சி, தொல்லை, தூண்டுதல்கள் போன்ற 284 அச்சுறுத்தல் சம்பவங்களை பதிவு செய்துள்ளதுடன் (Secretariat for Muslims, 2013) 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தினை அடுத்தும் இவ் வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளதாக குறிப்பிடுகின்றது (Secretariat for Muslims, 2015).

## 4. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலானது 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று இலங்கையின் தலைநகரான கொழும்பிலும் கிழக்கில் முக்கிய நகரமாக விளங்கும் மட்டக்களப்பிலும் மிகவும் ஒருங்கிணைந்த அடிப்படையிலும் திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான காரணம் தொடர்பில் பல்வேறு கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்துள்ளன. இலங்கை முஸ்லிம்களின் அரபுமயமாக்கலை இத்தாக்குதலுக்கான காரணமாக அடையாளப்படுத்தியுள்ளனர். இத்தாக்குதலுடன் முஸ்லிம்களில் சிறுபகுதியினர் தொடர்பு பட்டிருப்பதன் காரணமாக ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம்களும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். தாக்குதல்களை தொடர்ந்து இலங்கை புலனாய்வுப் பிரிவினர் அது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்ததுடன் அதற்கான சூத்திரதாரிகளையும் அடையாளங் கண்டனர். அதன்படி தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பைச் சேர்ந்த மொஹமட் சஹ்ரான் (Mohammed Zahran) அல்லது சஹ்ரான் ஹாசிமி (Zahran Hashmi) என்பவரின் தலைமையில் குறித்த தாக்குதல்கள் நடாத்தப்பட்டதாக இலங்கை அதிகாரிகள் கண்டறிந்தனர். மொஹமட் சஹ்ரான் என்பவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தீவிரவாத உரைகள் நிகழ்த்தி வருவதாக முஸ்லிம் தலைவர்களினால் அறியப்பட்டு குற்றஞ்சாட்டப் பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடன் இணைந்து தாக்குதல்களில் ஈடுபட்ட ஏனைய எட்டு குண்டுதாரிகளும் கூட இலங்கை முஸ்லிம்கள் எனவும் இவர்கள் அனைவரும் திட்டமிட்ட அடிப்படைகளில் குண்டுத்தாக்கு தல்களை மேற்கொண்டிருந்தனர் எனவும் விசாரணைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களானது அரசியல் ரீதியிலாக ஏற்படுத்திய தாக்கங்கள் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்து விடும் அளவுக்கு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. பெண்கள் நிகாப் அணியத் தடை விதிக்கப்பட்டதுடன் அவசரகால சட்டங்களும் அமுலாக்கப்பட்டது. அவ்வாறே அதிகரித்த சமூகத்தின் துன்புறுத்தல்கள் பாதுகாப்பு படையால் இடம்பெற்றது (Irshad, 2019). தாக்குதலில் சில வாரங்களுக்குப் பின்னர் உள்ளூர் முஸ்லிம்களின் சொத்துக்கள் அழிக்கப் பட்டமை, முஸ்லிம் பொதுமக்கள் தீவிரவாத கும்பல்களின் கைகளால் கொல்லப்பட்டமை (Amarasingam & Fuller, 2019) நாட்டின் பல பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிரான எதிர்ப்பு வன்முறை அலைகள் இடம்பெற்றமை போன்றன தங்களுக்கு எதிராக மோசமான வன்முறைகள் இடம் பெறுவதாக உணர்ந்து கொண்டனர்.

## 5. COVID19 தொற்றினால் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட சவால்கள்

இலங்கையில் பரவியுள்ள Covid19ஆனது ஒரு வருடத்தின் பின்னரான ஈஸ்டர் தாக்குதலின் விளைவினை தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிரான அதே உணர்வினைத் தூண்டியுள்ளது. இது தேசிய ஊடகங்களால் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அரசியல்வாதிகளாலும் ஆதரிக்கப்படுவதுடன் இஸ்லாமோபியாவின் அடிப்படையில் தேஜுவு எனும் உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம் சமூகத்தை காட்டுமிராண்டித்தனமானவர்களாக, தேசபக்தி அற்றவர்

களாக மற்றும் பொறுப்பற்ற சமூகமாக கருதி இதுவே Covid19 பரவுவதற்கு காரணமாகும் எனவும் இனவெறி ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டது (Saleem, 2020b).

இலங்கையில் முதலாவது Covid19 மரணம் மார்ச் 2020 இடம்பெற்றதுடன் அவர் தகனமும் செய்யப்பட்டார் (The Times of India, 2020). தகனம் செய்வதற்கான நடைமுறை பௌத்த மற்றும் இந்துக்களின் பாரம்பரிய முறையாக கருதப்படுகின்றது. எனினும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மரணித்தவர்களை அடக்கம் செய்வதே பாரம்பரிய முறையாகும். அவ்வாறே கிறிஸ்தவர்களும் யூதர்களும் இம்முறையையே பின்பற்றுவார்கள். ஆனால் சுற்றுச் சூழலை காரணம்காட்டி இலங்கை அரசானது Covid19 நோயினால் மரணிக்கும் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் உட்பட அனைத்து உடல்களையும் தகனம் செய்தது. Covid19 தொற்று நோயினால் இறந்த உடல்களை அடக்கம் செய்வது பாதுகாப்பானது என உலக சுகாதார அமைப்பு கூறிய போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கமானது Covid19 தொற்று நோயினால் இறந்த உடல்களை அடக்கம் செய்வதால் நிலத்தடி நீர் பாதிப்படையும் எனக்கூறியது (World Health Organization, 2020; Fowsar et al., 2022).

இலங்கை அரசாங்கத்தின் தகன கொள்கையானது முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் ஏமாற்றம் மற்றும் எரிச்சலை ஊட்டியுள்ளது (Mohamed Saleem, 2020a). உள்ளூர் சிறுபான்மையினர் குறித்து அரசாங்கம் உணர்ச்சியற்றதாக இருப்பதாக பலர் சந்தேகிப்பதுடன் அரசாங்கத்தின் நிர்வாக தோல்விகளை Covid19 மூலம் சமாளிப்பதற்கு முயற்சிக்கின்றனர். இந்நிலையானது பௌத்த தீவிரவாத சக்திகளுக்கு வெகுமதி அளிப்பதாக உள்ளது. இவ் அடிப்படையிலேதான் தேசியவாத பௌத்த பிக்குகள், அரசாங்கத்தின் தகன கொள்கை குறித்து மகிழ்ச்சி அடைவதுடன் தகன கொள்கை குறித்த முஸ்லிம்களின் கவலைகளுக்கு அரசாங்கம் இடமளிக்காதது குறித்தும் பாராட்டுகின்றனர். எனினும் இந்த நாட்டில் சிறுபான்மையினர் பாரம்பரியமாக ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர். அந்த வகையிலே தான் Covid19 தொற்றுக்குள்ளான முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதும் முஸ்லிம்களின் மத நம்பிக்கைகள் அலட்சியப்படுத்தப்படுவதும் ஆச்சரியமானவை அல்ல. இலங்கை முஸ்லிம்களின் மீதான அச்சுறுத்தல்கள், பாகுபாடு, வன்முறை குறித்த அச்சம், Covid19 தொற்றை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் இறந்த உடல்களை அடக்க முடியாத நிலை போன்றன அவர்கள் அமைதியாக வாழ்வது கடினமாக உள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது (Mahamoor, 2020).

கொவிட் 19 தொற்றினால் மரணித்த முதலாவது முஸ்லிமின் உடலானது முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அதிர்ச்சியை ஊட்டும் வகையிலும் மரணித்தவரின் குடும்ப உறுப்பினர்களின் விருப்பத்திற்கு எதிராகவும் தகனம் செய்யப்பட்டது. பல்வேறு தலைவர்கள், மனித உரிமை அமைப்புகள், உள்ளூர் மற்றும் சர்வதேச கலாசார நிறுவனங்கள் போன்றன இறந்த உடல்களை தகனம் செய்ய தேவை இல்லை என கருதிய போதிலும் இலங்கையில் முதலாவது Covid19 தொற்றுக்குள்ளான நோயாளி அடையாளம் காணப்பட்டதிலிருந்து அரசாங்கமும் பொது சுகாதார அமைப்பும் இறந்த உடல்களை தகனம் செய்வதில் பிடிவாதமாக நின்றது. Covid19 பாசிட்டிவ் என்ற தவறான கருத்துகளால் முஸ்லிம் உடல்கள் தகனம் செய்யப்பட்ட பல நிகழ்வுகள் நடந்தேறி உள்ளன (Harees, 2020).

Covid19 இழப்புகளின் இன விகிதத்தை இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை எனினும் 2020 டிசம்பர் நிலவரப்படி இலங்கை சனத்தொகையில் சுமார் 10 வீதமான முஸ்லிம்கள் இறந்துள்ளனர் என அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன (Harees, 2021). உண்மை என்னவெனில் இலங்கையில் பௌத்த சிங்களவர்கள் தமிழர்கள் கிறிஸ்தவர்கள் போன்றோரை விட இத்தொற்றுக்குள்ளானோரின் இறப்பு விகிதம் முஸ்லிம்கள் மத்தியில் அதிகமாக உள்ளது.

இன்று ஏன் ஏனைய இனக்குழுக்களை விட முஸ்லிம்கள் Covid19 தொற்றினால் அதிகம் இழப்புக்கு உள்ளாகின்றனர் என்ற கேள்வி எழுந்துள்ளது. இலங்கை முஸ்லிம்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட கூடியவர்களாக இன்று மாறியுள்ளனர். இதன் அடிப்படையில்தான் முஸ்லிம் சமூகங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தகனக் கொள்கை காணப்படுகின்றது. முஸ்லிகளை தகனம் செய்யும் கொள்கையானது எந்தவித அறிவியல் ஆதாரமும் இல்லாத தன்னிச்சையான செயல்பாடாகவும் காணப்படுகின்றது.

ஆகவேதான் Covid19இன் பிற்கால பகுதியில் பெற்றுக்கொண்ட அனுபவமானது இலங்கை அரசின் மீதான நம்பிக்கையை சவாலுக்கு உட்படுத்தியுள்ளது எனலாம். சிங்கள-பௌத்த தேசியவாதிகளை திருப்திப்படுத்துவதற்காகவே இலங்கை அரசு தகன கொள்கையை கொண்டு வந்தனர் என்ற

கருத்தும் முஸ்லிம்கள் மத்தியில் நிலவி வருகின்றது. மேலும் Covid19 தொற்றானது முஸ்லீம் சமூகத்துக்கு மத்தியில் வேண்டுமென்று பரப்பப்பட்ட ஒன்றாகும் என்ற கருத்தும் காணப்படுகின்றது. எனவேதான் சிறுபான்மையினர் அரசு மீது நம்பிக்கையை இழக்கும் போது சமூகத்தில் சில உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடலாம் என்பதை இலங்கையின் அனுபவத்தின் வாயிலாக நாம் அறிந்து கொண்ட விடயமாகும் (Imtiyaz and Stavis, 2008). எனவே ஏன் இலங்கையில் ஏனைய சமூகங்களை விட முஸ்லிம் சமூகத்தில் Covid19 தொற்றினால் அதிகம் பேர் உயிரிழந்துள்ளனர் எனும் வினாவிற்கு அறிவியல் ரீதியான விளக்கம் கண்டுபிடிக்கப்பட வேண்டும் எனலாம்.

## 6. முடிவுரை

இலங்கையில் முஸ்லிம் சமூகமானது ஏனைய இன அரசியலின் செல்வாக்கிற்குட்பட்டு தன்னை ஏனைய சமூகங்களிற்கு மத்தியில் ஓர் மூன்றாம் சமூகத்தினர் என்ற வரையறைக்குள் கொண்டு வந்துள்ளது. இலங்கை அரசியலை தீர்மானிக்கும் ஓர் முக்கிய புள்ளியாக முஸ்லிம் சமூகத்தினர் காணப்படுகின்ற போதிலும் அவர்கள் பயங்கரவாதிகளாகவும் தீவிரவாதிகளாகவும் இலங்கை அரசாங்கத்தின் அனுசரனையுடன் பௌத்த தேசிய சக்திகளால் விமர்சிக்கப்பட்டு வருகின்றனர். முஸ்லிம் சமூகத்தினர் தமது சொந்த அடையாளத்தினை வெளிப்படுத்த முயற்சிக்கும் போது இலங்கையின் ஏனைய இனக்குழுக்களுக்கு மத்தியில் சமலைநிலைத் தலையீட்டுடன் நடந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தின் கீழ் உள்ளது. இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம்கள் தங்களை நிருபராதிகளாகவும் நம்பிக்கையா ளர்களாகவும் நிரூபிப்பதற்காக தினம் தினம் போராடி வருகின்றனர். தமிழ் மற்றும் சிங்கள இனத்தோர் மத்தியில் முஸ்லிம் சமூகம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்டு வரும் இந்நிலையில் Covid19 தொற்று நோயின் விளைவுகளானது முஸ்லிம் சமூகத்தின் மீதான பழிவாங்கல் முயற்சியாகக் காணப் படுகின்றது எனலாம். முஸ்லிம் சமூகத்திற்கெதிராகக் கொண்டுவரப்பட்ட தகனக்கொள் கையானது இஸ்லாமியர்களின் வழிபாட்டு அம்சங்களையும் அடையாளத்தினையும் கேள்விக்கு உள்ளாக்கும் அரசாங்கத்தினதும் பௌத்த தேசியவாதிகளினதும் செயற்பாடுகளாகும். இச்செயற் பாடுகள் ஏனைய சர்வதேச நாடுகளாலும் சர்வதேச அமைப்புக்களாலும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டு வந்தாலும் கூட இவற்றை மீறிய அரசாங்கத்தின் செயற்பாடானது முஸ்லிம் சமூகத்தின் மீதான அடக்கு முறை என்றே கூற முடியும். ஆகவேதான், பல்லின சமூகத்தினைக் கொண்ட நாடானது வேறுபட்ட இன மத கலாச்சாரத்தை பின்பற்றும் மக்களை கொண்டுள்ள போது அந் நாட்டு அரசாங்கமானது அனைத்து வேறுபாடுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனலாம்.

## உசாத்துணைகள்

BBC News Asia. (2013). *The hardline Buddhists targetting Sri Lanka's Muslims.* Retrieved from: http://www.bbc.co.uk/news/world-asia-21840600

BBC News. (2012). *Sri Lankan Muslims strike over Dambulla mosque*. Retrieved from: http://www.bbc.co.uk/news/world-asia-17852900 Calhoun, C. (2016).*Religion, Government and the Public Good*. Manchester: William Temple Foundation.

Centre for Policy Alternatives. (2013). *Attacks on Places of Religious Worship in Post-War Sri Lanka.* Retrieved from: http://www.cpalanka.org/attacks-on-places-of-religious-worship-in-post-war-sri-lanka

Deegalle, M. (2007).*Buddhist monks and political activism in Sri Lanka*. London: I.B. Tauris &Co Ltd.

Fowsar, M. A. M., Raja, N. K. K., & Rameez, M. A. M. (2022). COVID-19 Pandemic Crisis Management in Sri Lanka. Slipping away from Success. In D. Briesen, N. Thi Thuy Trang, & P. Quang Minh (Eds.), *Times of Uncertainty: National Policies and International Relations under COVID-19 in Southeast-Asia and Beyond* (1 ed., pp. 401422). Nomos Baden-Baden. https://doi.org/10.5771/9783748927495-401

Gunatilleke, G. (2015). *The Chronic and the Acute: Post-War Religious Violence in Sri Lanka*. Colombo: International Centre for Ethnic Studies and Equitas - International Centre for Human Rights Education.

Harees, M. (2020). *Unreasonable 'Covid-Cremation Policy'*.Retrieved from: https://www.colombotelegraph.com/index.php/unreasonable-covid-cremation-policy-potentially-deadly-payback-would-be-enormous/

Saleem, A. (2016). *Muslim-state relations in Sri Lanka: A challenge for post conflict reconciliation.* London: Palgrave Macmillan.

Saleem, A. M. & Imtiyaz, A. R. M. (2015). Muslims in post war Sri Lanka: Understanding Sinhala Buddhist mobilization against them. *Asian Ethnicity, 16*(2).

Saleem, A. M. (2020). *Remembering the Easter Sunday victims in the shadow of COVID-19*. Retrieved from: https://www.fairobserver.com/region/central_south_asia/amjad-saleem-sri-lanka-news-coronavirus-covid-19-easter-sunday-attacks-south-asia-news-38948/

Secretariat for Muslims.(2013). *Perceptions and Documentation of Hate Crime*. Retrieved from: http://bit.ly/1vCc3jy

Secretariat for Muslims.(2015). *Anti Muslim Sentiment in Sri Lanka*. Retrieved from: http://sfmsl.org/wp-content/uploads/2015/11/Anti-Muslim-Sentiment-in-Sri-Lanka_May-August_2015.pdf

Tegal, M. (2014).*The burning fires of Aluthgama*. Retrieved from: https://web.archive.org/web/20140625054615/http://www.thesundayleader.lk/2014/06/22/the-burning-fires-of-aluthgama/

The Times of India. (2020). *Sri Lanka records first death due to corona virus*. Retrieved from: https://timesofindia.indiatimes.com/world/south-asia/sri-lanka-records-first-death-due-to-coronavirus/articleshow/74872037.cms

World Health Organization. (2020). *Infection prevention and control for the safe management of a dead body in the context of COVID-19: interim guidance.* Retrieved from: https://www.who.int/publications/i/item/infection-prevention-and-control-for-the-safe-management-ofa-dead-body-in-the-context-of-covid-19-interim-guidance

Zuhair, A. (2016). *Dynamics of Sinhala Buddhist ethno-nationalism in post war Sri Lanka*. Retrieved from: http://www.cpalanka.org/wp-content/uploads/2016/04/Dynamics-ofSinhala-Buddhist-Ethno-Nationalism-in-Post-War-Sri-Lanka.pdf